# இரண்டாம் பருவ பொதுத் தொகுத்தறித் தேர்வு - 2019

## ஆறாம் வகுப்பு

பதிவு எண்: 60116

நேரம்: 2.00 மணி **சமூக அறிவியல்** மதிப்பெண்கள்: 60

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** 10×1=10

1. ஆரியர்கள் ............. லிருந்து வந்தனர்.
   அ) சீனா ஆ) வடக்கு ஆசியா இ) மத்திய ஆசியா ஈ) ஐரோப்பா
2. நம் நாட்டின் தேசிய குறிக்கோள் "வாய்மையே வெல்லும்" .......... லிருந்து எடுக்கப்பட்டது.
   அ) பிராமணம் ஆ) ஆரண்யகம் இ) வேதம் ஈ) உபநிடதம்
3. பௌத்த நூல்களின் பெயர் என்ன?
   அ) அங்கங்கள் ஆ) திரிபீடகங்கள் இ) திருக்குறள் ஈ) நாலடியார்
4. புத்தர் தனது முதல் போதனை உரையை எங்கு நிகழ்த்தினார்?
   அ) லும்பினி ஆ) சாரநாத் இ) தட்சசீலம் ஈ) புத்தகயா
5. நான்கு மகாஜன பதங்களில் மிகவும் வலிமையான அரசு எது?
   அ) அங்கம் ஆ) மகதம் இ) கோசலம் ஈ) வஜ்ஜி
6. செலுகஸ் நிகேடரின் தூதுவர் ..........
   அ) டாலமி ஆ) கௌடில்யர் இ) செர்சக்ஸ் ஈ) மெகஸ்தனிஸ்
7. கரும்பிலிருந்து ............ தயாரிக்கப்படுகிறது.
   அ) மைதா ஆ) சர்க்கரை இ) பருப்பு ஈ) ஓட்ஸ்
8. இந்தியாவின் தேசிய கீதம் .............
   அ) ஜன கண மன ஆ) வந்தே மாதரம்
   இ) அமர்சோனார் பாங்கலே ஈ) நீராருங் கடலுடுத்த
9. ............பிறந்த நாளை சர்வதேச அகிம்சை நாளாகக் கொண்டாடுகிறோம்.
   அ) மகாத்மா காந்தி ஆ) சுபாஸ் சந்திரபோஸ்
   இ) சர்தார் வல்லபாய் படேல் ஈ) ஜவஹர்லால் நேரு
10. இந்தியக் குடிமக்களின் வாக்குரிமைக்கான வயது ..........
   அ) 14 ஆ) 18 இ) 16 ஈ) 21

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:** 10×1=10

11. வேதகாலத்தில் மக்களிடமிருந்து ............... என்ற வரி வசூலிக்கப்பட்டது.
12. மகாவீரரின் கோட்பாடு ........... என்று அழைக்கப்படுகிறது.
13. ............. என்பது புத்தரின் உடல் எச்சங்கள் மீது கட்டப்பட்டனவாகும்.
14. மௌரியப் பேரரசை தோற்றுவித்தவர் ............
15. ............. மகதத்தின் தொடக்ககாலத் தலைநகராக இருந்தது.
16. ............. வளம் மிகவும் மதிப்புமிக்க வளமாகும்.
17. குறிப்பிட்ட பகுதிகளில் காணப்படும் வளங்கள் .......... எனப்படுகிறது.
18. இந்தியாவின் தேசிய பறவை .............
19. இந்திய நாணயத்தின் குறியீட்டை வடிவமைத்தவர் ...............
20. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் தந்தை என போற்றப்படுபவர் .................

www.Padasalai.Net www.CBSEtips.in



**III. பொருத்துக:** 5×1=5

21. கொடுமணல் - அர்த்தசாஸ்திரம்
22. புத்தர் - மாம்பழம்
23. சாணக்கியா - சுழல் அச்சுகள்
24. தேசிய கனி - ஜனவரி 26
25. குடியரசு தினம் - சாக்கிய முனி

**IV. சரியா ? தவறா?** 3×1=3

26. நடுக்கல் என்பது மதிப்பு வாய்ந்த மரணத்தைத் தழுவிய ஒரு வீரனின் நினைவாக நடப்படுவதாகும்.
27. புத்தர் கர்மாவை நம்பினார்.
28. அசோகர் கலிங்கப்போரில் தோல்வியடைந்த பின்னர் போரைக் கைவிட்டார்.

**V. கூற்றைக் காரணத்தோடு பொருத்துக:** 2×1=2

29. *கூற்று :* வேதகாலம் குறித்து கற்க அதிக அளவு இலக்கியச் சான்றுகள் மற்றும் பயன்பாட்டு பொருள் சான்றுகள் கிடைத்துள்ளன.
*காரணம் :* நான்கு வேதங்கள், பிராமணங்கள், ஆரண்யங்கள் மற்றும் உபநிடதங்களை உள்ளடக்கியதே சுருதிகளாகும்.
அ) கூற்றும் காரணமும் சரியானவை, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே.
ஆ) கூற்றும் காரணமும் சரியானவை, காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல.
இ) கூற்று சரி. காரணம் தவறு. ஈ) கூற்று தவறு, காரணம் சரி.

30. *சரியான விடையைக் கண்டறியவும்:*
விகாரைகள் எதற்காகப் பயன்படுத்தப்பட்டன?
1. கல்விக்கூடமாக 2. பௌத்தத் துறவிகளின் தங்குமிடம்
3. புனிதப் பயணிகள் தங்குவதற்காக 4. வழிப்பாட்டுக்கூடம்
அ) 2 சரி ஆ) 1 மற்றும் 3 சரி
இ) 1, 2, 4 ஆகியவை சரி ஈ) 1 மற்றும் 4 சரி

**VI. ஓரிரு வார்த்தையில் விடையளி (ஏதேனும் 5):** 5×2=10

31. நான்கு வேதங்களின் பெயர்களை குறிப்பிடுக.
32. சமணத்தின் மூன்று ரத்தினங்கள் எவை?
33. மௌரியர்களைப் பற்றிக் குறிப்பிடுகின்ற ஒரு தமிழ் நூல் கூறுக.
34. வளங்கள் என்றால் என்ன?
35. தேசியக் கொடியில் உள்ள நிறங்கள் குறிப்பன எவை?
36. அரசமைப்புச் சட்டம் என்றால் என்ன?
37. பண்டமாற்று முறை என்றால் என்ன?

**VII. ஏதேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி:** 3×5=15

38. கொடுமணலிலுள்ள தொல்லியல் ஆய்விடம் குறித்து சுருக்கமாய் எழுதுக.
39. பௌத்தத்தின் எட்டு நெறிகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
40. வளங்களை பாதுகாப்பது எப்படி?
41. தேசிய கீதத்தின் சிறப்பம்சங்கள் எவை?
42. நீ செய்ய விரும்புபம் கடமைகளைப் பட்டியலிடுக.

**VIII. இந்திய அரசியல் வரைபடத்தில் கீழ்கண்ட இடங்களை குறிக்கவும்:** 5×1=5

1. வங்காள விரிகுடா 2. அரபிக்கடல்
3. இந்தியப் பெருங்கடல் 4. பாடலிபுத்திரம் 5. டெல்லி

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com